தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 11, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு 2023.

1992 ஏப்ரல் 23, வியாழக் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று''

தேர்ந்த அறிவினை உடையவர்கள் நிறைந்த அவையில், அத்தகையோருக்கென வாதிடுவது தானே வளரும் தன்மையுடைய பயிருக்குப் பாத்தி கட்டி, நீர் பாய்ச்சுவதற்கு ஒப்பாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 590, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

590—

சிறைக் கைதிகளுக்கு உணவு வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதைத் தடுக்க நடவடிக்கை.

*5555 திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு நிர்ணயித்துள்ள நெறிமுறைகளின்படி சிறைகளில் கைதிகளுக்கு உணவு மற்ற வசதிகள் வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதாக அரசுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் முறையீடுகள் ஏதேனும் வந்தனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன?

(இ) அவற்றின் மீது இந்த அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 20—2—1990-ல் ஆனந்தன் என்பவரிடம் முன்னாள் தி.மு.க. சட்ட அமைச்சருக்கு ஒரு புகார் மனுவும் 25—2—1992-ல் வேலூர் மத்திய சிறைவாசி ரவிச்சந்திரன் மற்றும் ஆனந்தன் ஆகிய இருவரும் சேர்ந்து தமிழக ஆளுநருக்கு ஒரு மனுவும் மற்றும் திருப்பத்தூர் கண்டவராயன்பட்டி இந்திய தேசிய காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. நா. அருணாசலம் 3—2—1991 நாளிட்ட மனு ஒன்றும் ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(இ) இம்மனுக்களில் கூறியுள்ள புகார்கள் மீது கூர்ந்து விசாரணை செய்ததில், அவை உண்மைக்குப் புறம்பானவை, ஆதாரமற்றவை என தெரிய வந்துள்ளன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைகளிலே உள்ள கைதிகளை அரசியல் கைதிகள் என்றும், இதர கைதிகள் என்றும் பிரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு வழங்குவதில் முறைகேடுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த வகையில் முறைகேடு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் தெளிவாக என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால் ஆய்ந்த பிறகு, அவர்கள் சொல்லியதில் அடிப்படை இல்லை என்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சிறைச்சாலைகளில் நம்முடைய சிறைவாசிகளுக்கு தரமான உணவு வழங்குவதிலும், தரமான உணவு தயாரிப்பதிலும் மிகவும் எச்சரிக்கையாக இன்றைக்குத் தமிழக அரசு கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கு 2 நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. ஒன்று, சிறைவாசிகளைப் பொறுத்த வரையில் 3 குழுக்கள், பஞ்சாயத்துக்கள் போல் இருக்கின்றன. அந்த 3 குழுக்கள்தான் உணவைச் சமைப்பது, உணவைத் தரம் பார்ப்பது, உணவைச் சரி பார்ப்பது, உணவை விநியோகம் செய்வது, அதை உரிய நேரத்தில் கொடுப்பது, அளவாகக் கொடுக்கப்படுகிறதா என்று பார்ப்பது ஆகிய இந்தப் பணிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கின்றன. அதுவும் சிறைவாசிகளை வைத்தே, கான்விக்ட்ஸ்களை வைத்தே இன்றைக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இரண்டு, இதில் ஏதாவது குறை இருந்தால் புகார்கள் செய்யலாம் என்று சொல்லி, ஒரு பெட்டி வைக்கப்

பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியில் சிறை அதிகாரிகளுக்குச் சம்பந்தம் கிடையாது. அங்கே குறை இருந்தால் சிறைவாசிகள் மனுப் போடலாம். அதை செஷன்ஸ் ஜட்ஜ், ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதி அன்று எடுத்து—சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல்—ஏதாவது குறை இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆக இந்த இரண்டு நடவடிக்கைகளின் மூலம் உணவு விநியோகம், உணவுத் தயாரிப்பு இதில் எந்த முறைகேடும் இல்லாமல் சிறைத் துறை இன்றைக்குக் கவனித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இன்று வேலூரிலே இருக்கக்கூடிய மத்திய சிறைச்சாலைக்கு கும்பகோணத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கம், சென்னையிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கம் காய்கறி, உணவுப் பொருள்களை எல்லாம் விநியோகம் செய்கின்றன. இதை எல்லாம் தவிர்த்து கற்பகம் சூப்பர் மார்க்கெட், சிந்தாமணி போன்ற கூட்டுறவில் முழுமையாக ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வாங்கினால் நிச்சயமாக அங்கே கொடுக்கக்கூடிய உணவு நல்ல முறையில் இருக்கும். கமிஷனும் போகாது. எனவே இதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனை நல்ல யோசனை, சரியான யோசனை. எனவே அந்த அடிப்படையிலே இன்னும் 2, 3 நாட்களுக்குள்ளாக இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் பிரிசன், ஹோம் செக்கரட்டரி இவர்களை எல்லாம் வைத்துக்கொண்டு, அந்தந்தப் பகுதியிலே உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளிலே அந்தப் பொருள்களை வாங்க ஏற்பாடு செய்ய மாண்புமிகு போற்றுதலுக்குரிய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

முற்பகல் 9-35.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கைதிகள் நிறைய அளவில் கைதியாகின்ற

போது அவர்களுக்கு சிறைகளில் சரியாக உணவு வழங்கப் படுவதில்லை. சரியாகக் கிடைப்பதில்லை. அரசியல் கைதிகள் ஏராளமாகக் கைது ஆவதால் அங்கே பற்றாக் குறை ஏற்பட்டு சரியான முறையில் அவர்களுக்கு உணவு வழங்கப்படமுடியவில்லை. அதற்கு அரசு ஏதாவது மாற்றுத் திட்டம் வைத்துள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களும் நானும் மதுரை சிறைச் சாலையிலே சென்ற ஜனவரி 1991-ல் இருந்தோம். இப்படி 10,000, 15,000 பேர் அரசியல் கைதிகள் திடீரென்று வரும்போது அந்த நிர்வாகம் சில நேரங் களில் சரியான நேரத்தில் உணவு வழங்க முடியாமல் இருக்கிறதே தவிர, மற்றபடி சரியாகத்தான் அங்கெல்லாம் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராம சுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ட்ரல் ஜெயில் கடலூர், தஞ்சாவூர், வேலூர், போன்ற சிறைகளில் உள்ள கைதி களுக்கு வழங்கப்படும் உணவில் புழுக்கள் இருப்பதாகக் குறைகூறியுள்ளார்கள். எனவே இதைக் களைய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லி யிருக்கிறேன். பாதிக்கப்பட்ட சிறைவாசிகள் யாராவது அங்கேயுள்ள அந்தப் பெட்டியில் புகாரைப் போட்டால் அதை செஷன்ஸ் ஜட்ஜ் பார்த்து உடனடியாக துரிதமாக நட வடிக்கை எடுப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கைதிகளுக்கு சாப்பாடு போடும்போது சாப்பாட்டிலே புழு இருந்தது. ஆனால் அதே நேரத்தில் 'காபிபோசா'வில் சிறையில் இருப்பவர் களுக்கு பாயாசத்தோடு சாப்பாடு போட்டிருக்கிறார்கள். அந்த நிலைமை இப்போது மாறியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 591, திரு. கே. செல்வராஜ், திரு. கே. ஆர். முருகானந்தம்; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

591—

புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமித்தல்.

*5014 **திரு. கே. செல்வராஜ் :**

திரு. கே. ஆர். முருகானந்தம் :

மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்படும் புகார் மனுக்களை வேலைப்பளு காரணமாக அவர் உடனடியாக பரிசீலனை செய்ய முடியாததால் உடனடியாக துரிதமாக மனுக்கள் மீது பரிசீலனை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக செயல்பட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவர் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் துணையாக மனுக்களைப் பார்ப்பதற்காக ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவரைப் போடுகிற நோக்கம் அரசுக்கு இப்போது இல்லை.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாவட்டத்தில் உள்ள எல்லா துறைகளின் நிர்வாகத்தின் பொறுப்பும் மாவட்ட ஆட்சியருக்கு உள்ளது. அவர்கள் பொது மக்களிடமிருந்து வரும் கோரிக்கை மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்யவும், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கொடுக்கின்ற மனுக்களானாலும் சில நேரங்களில் 2, 3 மாதங்கள் ஆகியும் முறையாகப் பதில் வருவதில்லை என்பதாலும், நாங்கள் உடனுக்குடன் அவைகளுக்கு நடவடிக்கை எடுக்கமுடியவில்லை என்பதாலும், இந்தப் பிரச்சினைகளைக்